රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව
அரசாங்க தகவல் திணைக்களம்
Department of Government Information

www.plusinfo.lk

**2026.03.03 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**17. அரச சேவையில் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் பணிக்குழாம் முகாமைத்துவத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விதந்துரைகளை அமுல்படுத்தல் (விடய இல. 45)**

அரச சேவையில் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்து தேவைகள், முன்னுரிமைகள் மற்றும் நேரச் சட்டகத்தை அடையாளங் கண்டு, அதுதொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரதமரின் செயலாளரின் தலைமையில் உத்தியோகத்தர் குழுவொன்றை நியமிப்பதற்காக 2024.12.30 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த குழுவுக்கு அந்தந்த அமைச்சுக்களில் குறித்த அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் நிலவுகின்ற பதவி வெற்றிடங்களைப் நிரப்புவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, 2026.02.12 அன்று இடம்பெற்ற குறித்த குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள விதந்துரைகளின் அடிப்படையில் கீழ்வரும் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்காக அந்தந்த அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

| தொடர் இல | அமைச்சுக்கள்/ மாகாண சபைகள் | ஆட்சேர்ப்புக்கான குழுவால் விதந்துரைக்கப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு | 300 |
| 02. | நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு | 67 |
| 03. | பாதுகாப்பு அமைச்சு | 9,794 |
| 04. | கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு | 112 |
| 05. | போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 121 |
| 06. | புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகார அமைச்சு | 02 |
| 07. | பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சு | 1,915 |
| 08. | பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | 66 |
| 09. | கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு | 60 |
| 10. | சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 776 |
| 11. | விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சு | 201 |
| 12. | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 214 |
| 13. | கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மறும் சமுதாய உட்கட்டமைப்பு அமைச்சு | 15 |
| 14. | சுற்றாடல் அமைச்சு | 213 |
| 15. | இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சு | 06 |
| 16. | வெளி விவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு | 03 |
| 17. | தொழில் அமைச்சு | 01 |
| 18. | பெருந்தோட்ட மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு | 09 |
| 19. | துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 339 |
| 20. | வலுசக்தி அமைச்சு | 01 |
| 21. | வர்த்தக, வாணிப,உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சு | 50 |
| 22. | வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சு | 10 |
| 23. | மத்திய மாகாண சபை | 22 |
| 24. | சப்பிரகமுவ மாகாண சபை | 236 |
| 25. | வடமேல் மாகாண சபை | 401 |
| 26. | வடமத்திய மாகாண சபை | 66 |
| 27. | கிழக்கு மாகாண சபை | 282 |
| 28. | ஊவா மாகாண சபை | 146 |
| 29. | வடக்கு மாகாண சபை | 411 |
| **மொத்தம்** | | **15,839** |